<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>

நாள் 03.02.2026

அசல் வழக்கு எண். 22/2014

வா.சா.1 – துர்கா லட்சுமி , க/பெ. சேகர்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

<u>குறுக்கு விசாரணை</u>

லோகநாதன் என்பவர் சித்த சுவாதீனம் இல்லாதவர் என்றால் சரிதான். வசந்தி உங்கள் அம்மாவின் உறவினர் என்றால் சரிதான். கமலாம்மாள், லோகநாதன் ஆகிய இருவரும் சேர்ந்துதான் சொத்துக்களை விற்பனை செய்தார்கள் என்றால் சரிதான். 16.10.2002 அன்று வசந்தி கிரையம் வாங்கினார் தெரியுமா என்றால் தெரியாது. வசந்தி தான் வாங்கிய சொத்துக்களை விற்பனை செய்து விட்டார் தெரியுமா என்றால் தெரியாது. வசந்தி கிரையம் வாங்கிய விவரம் உங்களுக்கு எப்போது தெரியவந்தது என்றால் திடீரென்று அப்பா வீட்டுக்கு சென்றேன் அப்போது தான் தெரியவந்தது எந்த வருடம் என்று நினைவில் இல்லை. ஆனால் நீங்கள் தாக்கல் செய்த அந்த ஆவணங்கள் கடந்த 2011ஆம் ஆண்டு வாங்கியது போல் உள்ளது அந்த ஆவணம் நீங்கள் நீதிமன்றத்தில் 7வது ஆவணமாக தாக்கல் செய்து உள்ளீர்கள் ஆகவே உங்களுக்கு அந்த காலகட்டத்திலேயே அது பற்றிய சங்கதிகள் தெரியும் என்று சொன்னால் ஞாபகம் இல்லை. வசந்தி அந்த சொத்துக்களை விற்பனை செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தமிழ் படிக்க தெரியுமா என்றால் தெரியாது. கீதா சந்திரசேகரன் கிரயம் வாங்கிய பத்திரத்தை எப்படி தாக்கல் செய்தீர்கள் என்றால் தெரியாது. சொத்தினை நீங்கள் பார்த்தீர்களா என்றால் திருவிழாக்கு செல்லும் பொழுது பார்த்தேன் எந்த வருடம் என்றால் வருடம் தெரியாது. இடத்தை துண்டு துண்டாக பிரித்து விற்பனை செய்து

விட்டார்கள் என்றால் தெரியாது. சாட்சி சொல்வதற்கு முன்பாக வில்லங்கம் வாங்கி பார்த்தீர்களா என்றால் பார்த்தேன். அதில் மனோகரன் கணேசன் மற்றும் அவர்கள் கிரயம் வாங்கிய விவரங்கள் அனைத்தும் வருகிறது என்றால் சரிதான். ஆனால் கடைசியாக கிரயம் வாங்கியவர்களை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான்.தற்பொழுது உங்கள் குடும்பத்தை சார்ந்தவர்கள் யாரும் அனுபவத்தில் இல்லை என்றால் சரியில்லை. வழக்கு சொத்தில் யார் அனுபவத்தில் இருக்கிறார்கள் என்றால் தெரியாது. ஒரு நிலத்தை உங்கள் அம்மா மற்றும் சகோதரன் சேர்ந்து பொது அதிகாரம் முன்னிலைக்கு வசந்தி என்பவருக்கு விற்பனை செய்துவிட்டார்கள் என்றால் தெரியாது. முத்தப்ப செட்டியார் மகன் ஏகாம்பரம் யார் என்றால் அவர் வசந்தியின் கணவர் ஆவார். அவர் அதிகார முகவர் என்கிற அடிப்படையில் விற்பனை செய்துள்ளார் என்றால் தெரியாது. கடந்த 2012 ஆம் ஆண்டு பதிவாளர் அலுவலகத்தில் ஆட்சேபனை மனு கொடுத்தீர்கள் என்றால் ஞாபகம் இல்லை. ஐந்தாம் வாதி பாலசுப்ரமணியம் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவர்களுடைய வாரிசுகளை வழக்கில் சேர்த்துள்ளீர்கள் என்றால் சரிதான். உங்கள் சகோதரர் லோகநாதன் செட்டியார் பத்திரத்தில் கையொப்பம் போட்டு உள்ளார் என்றால் தெரியாது. சகோதரிகள் ஆகிய எங்களுக்கு தெரியாமல் என்னுடைய தாயும் என்னுடைய சகோதரன் லோகநாதன் என்பவரும் சேர்ந்து விற்பனை செய்து விட்டதாக பதிவாளர் அலுவலகத்தில் மனு கொடுத்துள்ளீர்கள் என்றால் எனக்கு தெரியாது உங்களுக்கு தெரியாமல் எப்படி மனு கொடுத்தீர்கள் என்றால் தெரியாது. உங்கள் சகோதரர் மனநிலை சரியில்லாதவர் அதாவது லோகநாதன் மனநிலை சரியில்லாதவர்

**என்று காட்டுவதற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் வாயால் சொன்னது தான் ஆவணம் எதுவுமில்லை. உங்கள் தாயாரும் உங்கள் சகோதரரும் விற்பனை செய்த பொழுது நீங்கள் வந்து உங்களுக்கு சேர வேண்டிய தொகையை வாங்கிச் சென்று விட்டீர்கள் என்றால் சரியில்லை. ஆகவே விற்பனை பத்திரம் உங்களை கட்டுப்படுத்தும் என்றால் சரியில்லை.**

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram